1982 பிப்ரவரி 10]

தமிழ் நாட்டிலுள்ள குரூப் மருத்துவ மனைகள்.

*வினா எண் 131—திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தோட்டத் தொழிலாளர் நலச்சட்டப்படி ஏற்படுத்த வேண்டிய குரூப் மருத்துவமனைகள் (Group Hospitals) தமிழ்நாட்டில் எந்தெந்த இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன ?

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அந்த மாதிரி குரூப் மருத்துவமனைகள் எத்தனை ஏற்படுத்தப்பட்டுள்ளன?

(இ) இல்லை என்றால் அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) தமிழ்நாட்டில் குரூப் மருத்துவமனைகள் அமைக்கப்படவில்லை?

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(இ) தோட்டத் தொழிலாளர் நலச் சட்டப்படி மருத்துவ வசதிகள் தொழிலாளர்களுக்கு செய்து தரவேண்டும். தொழிலாளர்களுக்குச் தேவையான நவீன மருத்துவ வசதிகள் செய்து கொடுப்பதை கருத்தில் கொண்டு கோயம்புத்தூரில் 20—2—81, உதகையில் 17—6—81 மற்றும் சென்னையில் 23—8—81 அன்றும் நடைபெற்ற முதலாளிகள்ன் பிரதிநிதிகள், மருத்துவப் பணித் துறை இயக்குநர் மற்றும் மருத்துவ அலுவலர் (தோட்டங்கள்) கூட்டத்தில் தோட்டத் தொழிலாளர் நலச் சட்டத்தின் கீழான விதிகளை மாற்றியமைக்க வேண்டுமென பொதுவாக ஒத்துக் கொள்ளப்பட்டு இம்மாற்றம் செய்ய வேண்டுமெனில் முதலாளிகளின் சங்கங்களை கலந்தாலோசித்து அவர்களின் கருத்துக்களையும் கவனிக்கவேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

எனவே தற்பொழுது தொகுதி மருத்துவ மனைகள் ஏற்படுத்தவில்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவரவர்களே, ஏறத்தாழ ஐயாயிரத்திற்கும் அதிகமான தோட்டத் தொழிலாளர்கள் இருக்கின்ற குமரி மாவட்டத்திலே இப்படி ஒரு பெரிய மருத்துவமனை இல்லாததால் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறவேண்டியிருக்கிறது Lean on bed முறை என்பதினால் அந்த மருத்துவமனைகளில் அதிகமான செலவு ஏற்படுகிறது. ஆகவே அங்கு அனுப்பப்படவில்லை. எனவே தோட்டத் தொழிலாளர்களுக்கு ஹையர் ட்ரீட்மென்ட் வசதி கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது மேலும்

அந்த மருத்துவமனைகளுக்குச் செல்ல பயணக் கட்டணமும் உண்டு என்பதால் அங்கே உள்ள தோட்ட முதலாளிகள் ஹையர் ட்ரீட்மென்ட் கொடுக்காமல் தப்பித்துக் கொள்ளுகின்ற நிலைமையைக் கணக்கில் கொண்டு அங்கே குரூப் மருத்துவமனைகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தோட்டத் தொழிலாளர்களுக்குத் தேவையான நவீன மருத்துவ வசதிகள் செய்து கொடுப்பதைக் கருத்திற் கொண்டு தோட்டத் தொழிலாளர் நலச் சட்டத்தின் கீழான விதிகளை மாற்றியமைக்க வேண்டுமென பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி அரசு ஆவன செய்யும் .

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவரவர்களே, தற்பொழுது அப்படிப்பட்ட மருத்துவ வசதி செய்து கொடுக்காமல் இருக்கும் முதலாளிகளிடமிருந்து, அந்தத் தொழிலாளர்கள் மற்ற மருத்துவமனைகளுக்குச் சென்று வைத்திய உதவி பெற்றால் அதற்கான செலவுப் பணத்தை வசூலித்துக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆலோசனைப் பரிசீலனை செய்யலாம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தோட்டங்களிலே வசிக்கின்ற தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் மலையிலே இருப்பவர்களுக்கு அடிக்கடி பஸ் போக்குவரத்து இல்லாதிருப்பதால் அந்தத் தோட்டங்களில் இருக்கின்ற டிஸ்பென்சரியில்தான் வைத்தியம் செய்து கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது. குறிப்பாக அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள மாஞ்சோலை, நாலுமுக்கு எஸ்டேட், குதிரைவெட்டி, ஊத்து போன்ற இடங்களில் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் குடும்பம் வசிக்கின்ற இந்த இடங்களில் ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்திக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தோட்டத் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி கொடுக்க வேண்டியது தோட்டத் அதிபர்களின் கடமையாகும். கார்டன்ஹாஸ்பிடல், குரூப் ஹாஸ்பிடல் என்று வைத்து, இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிய கருத்துக்களை மனதிற்கொண்டு, ஏற்கனவே பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருப்பதால் எவ்வளவு அதிகமாகத் தொழிலாளர்களுக்கு வசதி செய்து கொடுக்க முடியுமோ அவைகளைச் செய்ய அரசு ஆவன செய்யும்.